**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.204/2017** **Date : 01/06/2023**

**PW2 (கதிரேசன் த/பெ.சுப்ரமணி) குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

1. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் விசாரணை செய்தனர். நான் காவல் நிலையத்தில் என்ன கூறினேனோ அதைதான் நீதிமன்றத்திலும் சாட்சியமாக அளித்தேன். 81 ன் கீழான விசாரணை அதிகாரி என்னை எங்களது அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்தார். என்னை விசாரணை செய்தபோது லட்சுமணன் என்னுடன் இருந்தாரா என்றால் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்தார். என்னை விசாரணை செய்தபோது, லட்சுமணனுக்கு அழைப்பாணை ஏதும் விசாரணை அதிகாரி அனுப்பினாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எங்களது வங்கியில் பராமரிக்கப்படும் ரொக்க புத்தகம் மற்றும் தினப்பேரேடு ஆகியவற்றை நான் எழுதுவேனா என்றால் ரொக்க புத்தகத்தை நான் எழுதுவேன். தினப்பேரேட்டை லட்சுமணன் எழுதுவார்.

2.கடன் கொடுப்பதற்கு முன்பு கடன் விண்ணப்பத்தை பரிசீலணை செய்வது எனது கடமை என்றால் சரியல்ல. ஏனென்றால் அதை லட்சுமணன் செயலாளராக செய்வார். ரொக்க புத்தகத்தில் அன்றன்றைக்கு உள்ள பதிவுகள் பராமரிக்கப்படும் என்றால் தினப்பேரேட்டில் வரவு வைக்கப்படும் பதிவுகள் ரொக்க புத்தகத்திலும் பதிவு வைக்கப்படும். தினப்பேரேட்டை பார்த்துதான் நான் ரொக்க புத்தகம் எழுதுவேன். தினப்பேரட்டில் உள்ள தொகையும் ரொக்க புத்தகத்தில் உள்ள தொகையும் சமமாக இல்லாமல் குறைபாடுகள் இருக்கும்போது, நான் அதுகுறித்து புகாரோ அல்லது முறையீடோ உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் தினப்பேரேட்டில் தவறு இருக்கும் போது, ரொக்க புத்தகத்தை நான் எழுதமாட்டேன். மறுத்துவிடுவேன். சாட்சி தானாக நான் பணிபுரிந்து ஓராண்டில் இந்த பிரச்சணை நடைபெற்றது எனவும், என்னை பணி நியமனம் செய்ததே ஆஜர் எதிரிதான் என்றும், அதனால் முறைகேடு இருந்தாலும், என்னால் உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க முடியாது எனவும், நான் தினப்பேரேட்டின் படிதான் ரொக்க புத்தகத்தை பராமரித்தேன் என்றும், கூறுகிறார். இந்த விபரத்தை நான் பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரி மற்றும் இந்த வழக்கிற்கான காவல் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தபோது கூறியுள்ளேனா என்றால் பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரி விசாரணை செய்தபோது கூறியுள்ளேன்.

3.கே.சி.சி. கடன் வழங்கும் முன்னர் கடன் விண்ணப்பம் பெறுவது வழக்கம் என்றால் சரிதான். கடன்தாரர்களுக்கு ஒரு ஜாமீன்தாரர் தேவை என்றால் சரிதான். இதை பரிசீலணை செய்வது மேற்பார்வையாளர் செய்வார் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்னர் நிர்வாக குழு கூடி தீர்மானம் இயற்றிய பின்புதான் மேற்பார்வையாளர் பரிசீலணை செய்வார். மேற்பார்வையாளர் மற்றும் நிர்வாகக்குழுவினர் கடன் விண்ணப்பம் சரியாக இருக்கும்பட்சத்தில் மட்டும்தான் கடன் வழங்க அனுமதிப்பார்கள் என்றால் சரிதான். கடன் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒரு பகுதி உரமாகவும், ஒரு பகுதி பணமாகவும், வழங்குவார்கள் என்றால் சரிதான். 50 சதவீத பணத்திற்கு உரமாக வழங்குவார்கள். பணம் வழங்குவதற்கு பட்டுவாடா பதிவேட்டில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பணத்தை பெற்றவர்கள் பணப்பட்டுவாடா பதிவேட்டில் கையொப்பமிடுவார்கள் என்றால் சரிதான். ஆனால் இந்த சங்கத்தில் பணம் கொடுப்பதற்கு முன்பே பணப்பட்டுவாடா பதிவேட்டில் கையொப்பம் பெற்றுவிடுவார்கள். இந்த விபரத்தை நான் பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரி மற்றும் இந்த வழக்கிற்கான காவல் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தபோது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

4.என்னிடம் யாராவது வந்து அவர்கள் கையொப்பமிட்டபடி பணம் கிடைக்கவில்லை என முறையீடு ஏதேனும் செய்தார்களா என்றால் இல்லை. எனக்கு நுகர்வோர் கடன் வழங்க அனுமதித்தபோது, நிர்வாக குழு

செயல்பட்டு கொண்டிருந்தது. நான் கொடுத்த விண்ணபத்தை நிர்வாக குழு பரிசீலணை செய்து எனக்கு கடன் வழங்கினார்களா என்றால் நான் விண்ணப்பமே வழங்கவில்லை. நான் அந்த கடனுக்கான தொகையை எனது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய சம்மத கடிதம் கொடுத்தேனா என்றால் நான் விண்ணப்பமே வழுங்கவில்லை. என்னுடைய மாத சம்பளத்திலிருந்து கடனுக்கான தொகை பிடித்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் ஒரு மாதத்திற்கு பிடிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த விபரம் எனக்கு மே மாதம் தனி அலுவலர் வந்த பிறகு தெரிய வந்தது. அதன்பின்பும் எனது சம்பளத்திலிருந்து மாதம் மாதம் அந்த கடனுக்கான தொகை பிடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏனென்றால் நான் எனக்கு இந்த விபரம் தெரிந்த பின்பு தனி அலுவலரிடம் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் தனி அலுவலர் என்னையும் எதிரியையும் அழைத்து பேசினார். அப்போது எதிரி கடனாக பெற்ற தொகையை செலவழித்துவிட்டதாகவும், அதனால் எனது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்வதாகவும், பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளுக்கு எதிரி பொறுப்பாவர் எனவும் எதிரி எனக்கு சங்கத்தின் லெட்டர் பேடில் எழுதி கொடுத்தார்.இந்த விபரத்தை நான் பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரி மற்றும் இந்த வழக்கிற்கான காவல் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தபோது கூறியுள்ளேனா என்றால் பிரிவு 81-ன் கீழான விசாரணை அதிகாரி விசாரணை செய்தபோது கூறியுள்ளேன். மேலும் அந்த

லெட்டர் பேடையும் அவரிடம் ஒப்படைத்தேன். காவல் துறையினர் விசாரணையின்போதும் கூறினேன்.

5.விசாரணை அதிகாரி கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தண்ட தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நடவடிக்கயையில் செல்வராஜ் மற்றும் எனக்கும் வழங்கப்பட்டதாக கூறப்படும் வாகன கடனுக்கான தொகை செலுத்தப்பட்டுவிட்டது என்றும், எவ்வித முறைகேடும் அதில் இல்லை என்றும், அதற்கான குற்றச்சாட்டு கைவிடப்பட்டது என்றால் சரிதான். அப்போது துணை பதிவாளர் எங்களை விசாரிக்காமல் விட்டுவிட்டார். தண்ட தீர்வை நடவடிக்கையின்போது நான் தான் அந்த வங்கியின் செயலாளராக பணியாற்றினேன் என்றால் சரிதான். ஆனால் கூடுதல் பொறுப்பில் பணியாற்றினேன். தண்ட தீர்வை நடவடிக்கையை வங்கி சார்பாக நான்தான் துவங்கினேன் என்றால் சரிதான். எதிரி தற்காலிக பணி நீக்கத்தில் இருந்தபோது, என்னைதான் பொறுப்பு செயலாளராக பணியாற்றினேன் என்றால் சரிதான். தற்போதும் நான் தான் செயலாளராக பணியாற்றுகிறேன் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் எதிரி தொழிலாளர் நலத்துறையில் முறையீடு செய்து அதன் அடிப்படையில் சங்கத்திற்கும் எதிரிக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டு அதன் அடிப்படையில் மீண்டும் எதிரி 2004 ம் ஆண்டு பணி அமர்த்தப்பட்டார் என கூறுகிறார். அவர் மீண்டும் பணியில் தொடர்ந்தால் எனக்கு செயலாளராக பணியாற்ற முடியாது என்பதால் நான் எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரில்ல. இந்த முறைகேடுகளுக்கு நான்தான் காரணம் என்றாலும், தனி அலுவலரும் நானும் சேர்ந்து எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல.

6.மேற்பார்வையாளர் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை எங்களது வங்கிக்கு வருவார் என்றால் தேவைப்படும்போதெல்லாம் வருவார். நான் ரொக்க புத்தகம் எழுதியதாக கூறப்படும் காலக்கட்டத்தில் மேற்பார்வையாளர் வந்தாரா என்றால் வந்து எதிரியின் முன்னிலையில் பார்வையிட்டுள்ளார். அதில் குறைபாடுகள் ஏதும் இருந்தார் அதை குறிப்பிட்டு அதற்கென குறிப்பாணை வழங்குவார்கள் என்றால் சரிதான். ஆனால் இந்த மேற்பார்வையாளர் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. நான் பணியாற்றிய ஓராண்டில் கூட்டுறவு சார்பதிவாளர் ஆய்வுக்கு வந்தாரா என்றால் இல்லை. நான் முறைகேடுகள் குறித்து எந்தவிதமான புகாரும் எழுத்துபூர்வமாக எதிரியை பணி நீக்கம் செய்யும் வரை கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள முறைகேடுகளுக்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும், எனக்கு கடன் முறையாக வழங்கப்பட்டு அதை எனது சம்பளத்தில் பிடித்தம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Judicial